| MSSRF Science for Sustainable Development | **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | மாவட்டம் : | **மதுரை** | காலம் : | **31/01/2024** | முதல் | **04/02/2024** |
| | அறிக்கை எண் : | **009/ 2024** | வெளியீட்டு நாள் : | **30/01/2024** | | |

## மதுரை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 33°-34° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 20° - 22° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| **கடந்தவார வானிலை (25.01.2024 முதல் 29.01.2024)** | | | | | | **அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 04-02-2024- 08.30 வரை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 25/01 | 26/01 | 27/01 | 28/01 | 29/01 | **தேதி** | **நாள்-1** 31/01 | **நாள்-2** 01/02 | **நாள்-3** 02/02 | **நாள்-4** 03/02 | **நாள்-5** 04/02 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 3 | 3 | 0 | 0 |
| 33 | 33 | 33 | 34 | 33 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 32 | 31 | 32 | 33 | 32 |
| 21 | 20 | 21 | 22 | 22 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 22 | 22 | 22 | 21 | 22 |
| 3 | 3 | 3 | 3 | 3 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 4 | 4 | 4 | 3 |
| 87 | 83 | 79 | 83 | 77 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 90 | 90 | 90 | 90 | 90 |
| 45 | 36 | 43 | 42 | 54 | | 50 | 50 | 50 | 40 | 40 |
| 9 | 11 | 13 | 8 | 7 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 9 | 6 | 8 | 6 |
| கிழக்கு | கிழக்கு | கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | காற்றின் திசை | **வட கிழக்கு** | **கிழக்கு** | **தென் கிழக்கு** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் பிப்ரவரி 1 மற்றும் 2 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 31°-33° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 21°-22° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 6 முதல் 9 கி.மீ வேகத்தில், வடகிழக்கு, கிழக்கு மற்றும் தென்கிழக்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

31.01.24 மற்றும் 04.02.24 தேதிகளில் மாவட்டத்தில் பெரும்பாலும் வறண்ட வானிலையே நிலவும். அதிகாலை நேரங்களில் மூடுபனி நிலவ வாய்ப்புள்ளதால், உங்கள் கால்நடைகளை சூரிய உதயத்திற்கு 2 மணி நேரத்திற்குப் பிறகு மட்டுமே மேய்ச்சலுக்கு அனுமதிக்கவும்.

.

**முக்கிய பயிர்கள் : மல்லிகை, நெல், கால்நடை.**

**மல்லிகை:**

தற்போது மல்லிகைப் பூப்பயிரில் கவாத்து செய்வதற்கு ஏற்ற தருணமாகும். மல்லிகைச் செடியை தரையிலிருந்து 50 செ.மீ உயரத்தில் கவாத்து செய்ய வேண்டும்.

கவாத்து செய்யும் போது நோயுற்ற உலர்ந்த குச்சிகள் மற்றும் குறுக்காக வளர்ந்த கிளைகளையும் வெட்டி விட்டு சூரிய ஒளி நன்கு படுமாறு செய்ய வேண்டும்.

**நெல் :**

நெல் பயிரில் செம்புள்ளி நோய் தாக்குதல் பரவவாக தென்படுகின்றது. இந்நோய் நாற்றாங்காலின் நாற்றுப் பருவத்திலிருந்து நடவு வயலின் பால் பருவம் வரை இப்பூசணம் பயிரைத் தாக்கும்.

முதலில் இந்நோய் மிகச்சிறிய பழுப்புப் புள்ளிகளாகத் தோன்றும். பின் உருளை வட்ட வடிவப் புள்ளிகளாக மாறிவிடும். பின் பல புள்ளிகள் ஒன்று சேர்ந்த நிலையில் இலைகள் காய்ந்து விடும். இந்நோய் பழுப்பு நிறப் புள்ளிகளுடன் கதிர் மற்றும் கழுத்துப் பகுதியை தாக்கும்.

இதனைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 500மில்லி என்ற அளவில் மெட்டோமினோஸ்ட்ரோபின் மருந்தினை தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்

.

**கால்நடை:**

வெள்ளாடு வளர்க்கும் விவசாயிகள் தங்களின் ஆடுகளுக்கு ஆட்டம்மை தடுப்பூசியை 3 முதல் 6 மாத வயதில் முதல் முறையும், தொடர்ச்சியாக ஆண்டுக்கு ஒரு முறையும் கோடைக் காலத்திற்கு முன்னர் போடுவது அவசியமாகும்.